அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி அஞ்சல் – 638 401, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.

இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி விபரம்

மாவட்டத்தின் பெயர் : ஈரோடு

| வ. எண். | திருக்கோயிலின் பெயர் மற்றும் அமைவிடம் / தலவரலாறு சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழா வின் சிறப்புகள் சுருக்கமாக | தொலை பேசி எண்கள் | Website & email ID |
|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்.<br><br>இத்திருத்தலம் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14 கி.மீ. தொலைவில் அடர்ந்த வனத்தினிடையே அமைந்துள்ளது.<br><br>சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு இவ்விடத்தின் சுற்று வட்டார கிராமமக்கள் தங்கள் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்காக பட்டிகள் அமைத்து தங்கியிருந்தார்கள். அச்சமயம் பட்டியிலிருந்த பசு ஒன்று பால் கறப்பதற்கும் நில்லாமல் தன் கன்றுக்கும் கொடுக்காமல் இருப்பதை அறிந்த மாடுகளை மேய்ப்போன் அப்பசுவினை பின்தொடர்ந்து கவனித்ததில் அப்பசு தினந்தோறும் ஒரு வேங்கை மரத்தின் அடியில் கணம்புற்கள் சூழ்ந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன்னிச்சையாக பாலினை பொழிவதை ஊர்பொதுமக்களை அழைத்து காண்பித்தான். மக்கள் அனைவரும் அவ்விடத்தை சுத்தம் செய்யுங்கால் கணம்புற்கள் சூழ்ந்த ஒருபுற்றும் அதனருகில் சுயம்புலிங்கத் திருவுருவும் வேங்கை மரத்தினடியில் இருப்பதைக் கண்டு கைகூப்பி நின்றார்கள். அச்சமயம் அக்கூட்டத்திலிருந்த ஒருவருக்கு அருள் உண்டாகி "தான் கேரளா மாநிலம் வண்ணார்க்காடு என்ற ஊரிலிருந்து பொதிமாடுகளை ஓட்டிக்கொண்டு மைசூர் செல்லும் மக்களுக்கு வழித்துணையாக வந்தேன்" என்றும் "எழில் மிகுந்த இவ்வியற்கை சூழலில் தான் தங்கிவிடுவதாகவும், தன்னை இனிமேல் **பண்ணாரி மாரியம்மன்** எனப்போற்றி வழிபட்டு வாருங்கள்" எனவும் அருள்வாக்கில் கூறினார். அன்னையின் அருள்வாக்கின்படி அவ்விடத்தில் கணங்குப்புற்கள் கொண்டு ஒரு குடில் அமைத்து கிராமிய முறைப்படி நாள்தோறும் பண்ணாரி அன்னையை வழிபட்டு வந்தனர். பின்பு ஊர் மக்களும் பெரியதனக்காரர்களும் அன்னையின் சிறப்புக்கருதி விமானத்துடன் கூடிய சிறு கோயில் அமைத்து பத்மபீடத்துடன் திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர். | ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் உத்திரத்தை ஒட்டி வரும் திங்கட் கிழமை இரவு (செவ்வாய்க் கிழமை அதிகாலை) குண்டம் திருவிழா நடைபெறும். | இத்திருக்கோயிலில் மே 2017ல் முக்கிய திருவிழாக்கள் ஏதுமில்லை. | | 04295–243289 மற்றும் 04295–243366 | www.bannariammantemple.tnhrce.in<br><br>bannariamman@tnhrce.org<br><br>bannariamman@gmail.com |